අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk


මගේ යොමුව / எனது இல. / My Ref. } ED/05/84/10/12-2019

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. }

දිනය / திகதி / Date } 2019.05. 17

பாராளுமன்ற பொதுச் செயலாளர்,
அரச கணக்கு தொடர்பான செயற்குழு,
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை.

**பாராளுமன்றத்தின் அரச கணக்கு தொடர்பான செயற்குழு சபையினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் தங்களது மேற்பார்வை மற்றும் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.**

மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பில் தங்களினால் எனக்கு அனுப்பப்பட்டுள்ள 2019.04.04 ஆம் திகதிய கடிதம் தொடர்பாக,

02. இதற்கமைய 2019.04.04 ஆம் திகதிய பாராளுமன்ற சபையில் சமர்ப்பிக்கப்பட்ட அரச கணக்குத் தொடர்பான செயற்குழுவின் பாராளுமன்ற வெளிப்பாட்டுத் தொடர் இலக்கம் 76 கொண்ட அறிக்கையின் கல்வி அமைச்சிற்குரிய விடயங்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் எனது மேற்பார்வையினை இத்தால் சமர்ப்பிக்கிறேன்.

**அகில விராஜ் காரியவசம்**
கல்வி அமைச்சர்
கல்வி அமைச்சு


ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister } +94112784832 / +94112784825 / minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary } +94112784811 / +94112785162 / secretary.education@moe.gov.lk

| | அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழு சபையினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள் / செயற்குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகள். | நிறுவனத்தினால் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல்/கட்டளைகளை அமுல்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள்/தற்போதைய நிலைமைகள் |
|---|---|---|
| | **கல்வி அமைச்சு**<br>**2018 ஆகஸ்ட்** | |
| 1 | தேசிய ஆசிரியர் இடமாற்றம் கொள்கை தொடர்பான தற்போதைய நிலைமை.<br><br>10 ஆண்டு இடமாற்ற 03 கட்டங்களும் செயற்படுத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேன்முறையீட்டு பணிகளும் இடமாற்றல் சபைகளும் நடாத்தி முடிக்கப்பட்டுள்ளதாகவும் பி.க.உ தெரிவித்தார். ஆனாலும் சில கஸ்டப் பிரதேநசங்களில் இக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுல்லதால் அதற்கு மாகாண சபைகளுடன் இணைந்து ஆசிரியர்களை பரிமாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அனைவருக்கும் நியாயம் கிடைக்கும் வகையில் இக் கொள்கையினை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுக்குரியதாக தேசிய பாடசாலைகளினால் கிடைக்கப் பெற்றுள்ள வருடாந்த விண்ணப்பப்படிவங்கள் மற்றும் 10 ஆண்டுகளை விட மேற்பட்ட ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பப்படிவம், ஆசிரியர் இடமாற்ற சபையினால் பரிசீலனை செய்து பாடங்களுக்கமைய மற்றும் காணப்படும் வெற்றிடங்களுக்கமைய ஒப்பீடுகளை மேற்கொண்டு இடமாற்றம் மேற்கொள்ளப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. |

| | 2018 | | | 2019 | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண்டு | 10 ஆண்டுகள் | மொத்தம் | ஆண்டு | 10 ஆண்டுகள் | மொத்தம் |
| மொத்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை | 2902 | 10589 | 13491 | 4826 | 2400 | 7226 |
| இடமாற்றம் மேற்கொள்ளப்பட்ட எண்ணிக்கை | 1165 | 7199 | 8364 | 1440 | 1210 | 2650 |
| இடமாற்றம் மேற்கொள்ளப்பட்ட விகிதாசாரம் | **40%** | **60%** | **62%** | **30%** | **51%** | **37%** |

இதற்கமைய ஒரு தேசிய பாடசாலையில் 10 ஆண்டுகளை விட சேவைக்காலம் காணப்பட்ட போதிலும் ஆசிரியர்களின் பாடத்திற்குரியதான பதிலீட்டாளர்களை ஒப்பீடு செய்வதன் சிரமம், பிரதேச ரீதியில் அமைந்துள்ள தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்களுக்காக பதிலீட்டாளரை ஒப்பீடு செய்ய முடியாமைக்கமைய மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட வயதெல்லையை தாண்டுவதற்கு இணங்க இடமாற்றம் மேற்கொள்ள முடியாதிருந்த ஆசிரியர்களின் அளவு வருடாந்த பாடசாலைகளில் எஞ்சுவதுடன் பாடத்திற்குரியதாக பதிலீட்டாளர்களை ஒப்பீடு செய்வதன் மூலம் இவ் ஆசிரியர்களும் எதிர்காலத்தில் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

| | | |
|---|---|---|
| 2 | பாடசாலை கட்டமைப்பில் இடம்பெற்ற முறைகேடுகள் மற்றும் ஒழுக்கயீனச் செயல்கள் காரணமாக பாடசாலைக் கட்டமைப்பில் தீராதிருந்த பிரச்சினைகள் தொடர்பான தற்போதைய நிலை தொடர்பாக குழு வினவியது. 2018 ஆம் ஆண்டு சனவரி 19 ஆம் திகதி வரையும் தீர்க்கப்படாதிருந்த ஒழுக்கம் சார்ந்த பிரச்சினைகளின் எண்ணிக்கை 554 என குழுவில் வெளிக்கொணரப்பட்டது.<br><br>இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நீண்ட காலம் எடுத்தல் மற்றும் அக் காரணத்தினால் வேறு பிரச்சினைகள் எழுவது தொடர்பாக குழுவினால் கவனம் செலுத்தப்படுவதோடு இவ் விடயங்கள் பகிரங்கச் சேவைகள் ஆணைக்குழுவின் கவனத்துக்கு கொண்டு சென்று பாடசாலைக் கட்டமைப்பில் இடம்பெறும் முறைகேடுகள் மற்றும் ஒழுக்கயீன செயல்கள் காரணமாக எழுந்துள்ள புகார்கள் மற்றும் பிரச்சனை தீர்வுக்குள்ள பொறிமுறை மற்றும் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக அறிக்கையொன்றை பகிரங்கச் சேவைகள் ஆணைக்குழுவிடம் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது. | ❖ கல்வி அமைச்சின் கீழ் நாடு பூராகவும் விரிவடைந்த காணப்படும் தேசிய பாடசாலைகள், கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் கல்லூரி மற்றும் அமைச்சில் சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகளை போன்று உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு பரிசோதனைகள் தொடர்பிலான விசாரனை செயற்பாடுகளுக்கு உரியதாக தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் வாசகத்திற்கமைய அடிப்படை ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் குற்றப் பத்திரங்களைத் தயாரிக்கும் செயற்பாடுகள் விசாரனை உத்தியோகத்தருக்குரிய பணியாகும். இதற்காக கல்வி அமைச்சிற்குரிய விசாரனை உத்தியோகத்தர் குழாம் மிகச் சிறியளவில் இருப்பதனால் விசாரனை உத்தியோகத்தர் பதவியின் அளவினை அதிகரிப்பதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>❖ விசாரனை உத்தியோகத்தர் நியமனக் கடிதத்தின் விசாரனைகளை பூர்த்தி செய்து அறிக்கை வழங்க வேண்டிய காலம் உரியவாறு குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அக்காலம் தாண்டிச் செல்வதாக மேற்பார்வை செய்யும் சேவையில் தொலைபேசி ஊடாக அல்லது நினைவுகூறல்களை அனுப்புவதன் மூலம் அல்லது விசாரனை செயற்பாடுகளை துரிதப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், தொடர்ந்தும் விசாரனைகள் தாமதமடைவதாயின் இடைக்கால அறிக்கையை வழங்குமாறு விசாரனை உத்தியோகத்தர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.<br><br>❖ விசாரனை மூலம் தெரிய வந்த விடயங்கள் தொடர்பில் தாபன விதிக் கோவையின் III பகுதியின் ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய முதலாவது உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களுக்காக மற்றும் இரண்டாவது உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களுக்காக குற்றப்பத்திரங்களை வெளியிட்டு முறையான ஒழுக்காற்று விசாரனைகளை மேற்கொள்ளல்.<br><br>❖ விசாரனை பரிந்துரைகளுக்கமைய குற்றப்பத்திரம் வெளியிடப்படாத சந்தர்ப்பத்தில் ஒழுக்காற்று செயற்பாட்டின் கீழ் எச்சரிக்கை விடுத்தல், இடமாற்றத்தை மேற்கொண்டு ஒழுக்காற்று செயற்பாடுகளை பூர்த்தி செய்தல்.<br><br>❖ அடிப்படை விசாரனைகள் மேற்கொள்ளப்படாத அனைத்து முறைப்பாடுகள் தொடர்பிலும் அது தொடர்பில் அதிபர் / மாகாண கல்விப் பணிப்பாளர்/ வலயக் கல்விப் பணிப்பாளரினால் அறிக்கைகளை பெற்று அம்முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.<br><br>❖ இது எவ்வாறாக இருப்பினும் விசாரனை உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டதன் பின்னர் முறையான ஒழுக்காற்று விசாரனை அறிக்கையினை வழங்குவது தொடர்பில் உரிய உத்தியோகத்தர்களுக்கு நினைவுகூறல்களை அனுப்பி ஒழுக்காற்றுச் செயற்பாடுகளை துரிதகதியில் பூர்த்தி செய்ய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>❖ தற்போது இறுதி அறிக்கையினை வழங்காதுள்ள வழக்குகள் தொடர்பான தகவல்கள் அமைச்சின் சட்ட உத்தியோகத்தர் / மாகாணக் கல்விப் பணிப்பாளர் / வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக உரிய |

| | | |
|---|---|---|
| | | நீதிமன்றங்களின் பதிவாளர்களை அறிவுறுத்தியதை தொடர்ந்து இறுதி வழங்கு அறிக்கையினை பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.<br>❖ அரச சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள் தாபன விதிக் கோவை மற்றும் நிதி ஒழுங்குக் கோவை, பெறுகை வழிகாட்டல் ஆலோசனை, பொது நிருவாக சுற்றறிக்கை, நிதி அமைச்சின் சுற்றறிக்கை, கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகளுக்குரியதாக செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய முறைகள் குறித்து அதிபர்களை அறிவுறுத்தல்.<br>❖ ஒழுக்காற்று செயற்பாடுகள் தொடர்பாக அதிபர்களை அறிவுறுத்தல்<br>❖ பாடசாலை முறைமையில் நிருவாகப் பிரச்சினைகளை தவிர்ப்பதற்காக பயிற்சி வேலைத்திட்டங்களை வகுத்தல்.<br>2019.02.28 ஆம் திகதி ஒழுக்காற்றுக் கோவைகளின் தற்போதைய நிலைமைகள் இணைப்பு 01 இன் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |
| 3 | அதிபர் ஆட்சேர்ப்பு தொடர்பான தற்போதைய நிலையை குழுவினால் வினவப்பட்டது.<br>2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆந் திகதியில் 353 தேசிய பாடசாலைகளில் 259 இல் அதிபர் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், இவற்றுக்கு கடமை நிறைவேற்றுவதற்கான பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.<br>தேசிய பாடசாலைகளின் அதிபர்களுக்கான சட்ட ரீதியான நியமனம் வழங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது எனவும் 2018 செப்டெம்பர் மாதம் குறிப்பிட்ட விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சை நடாத்தப்படவுள்ளது எனவும் த.க.உ. தெரிவித்தார். | ▪ நாட்டின் 302 தேசிய பாடசாலைகளில் காணப்படும் அதிபர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக நேர்முகப் பரீட்சை 2018 பெப்ரவரி மாதம் 16, 18, 19, 20, 22, 23, 25, 26, 27 ஆம் திகதியன்றும் நவம்பர் மாதம் 26, 27, 29 ஆகிய திகதிகளிலும் டிசம்பர் மாதம் 01, 02, 03, 04, 06, 07, 14, 17 ஆகிய திகதிகளிலும் நடாத்தப்பட்டதுடன், வெற்றிடமாக உள்ள அதிபர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்கமைய உத்தேச உத்தியோகத்தர்களின் பெயர்ப்பட்டியல் மற்றும் நேர்முகப் பரிட்சைக்குரிய ஏனைய சகல ஆவணங்களும் எனது இலக்கம் ED/4/58/20/ESC(ii) மற்றும் 2019.02.13 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அரச சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைக் குழுவிற்கு அனுப்பப்பட்டது.<br>▪ அரச சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைக் குழுவின் செயலாளரின் இலக்கம் ESC/APP/SLPS/04/59/2017 (VOL II) மற்றும் 2019.03.01 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அனேகமான பாடசாலைகளுக்காக உரிய சேவையில் / தரத்தின் உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்காமைக்கமைய இந்நேர்முகப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆவணங்களை இரத்துச் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br>▪ இது தொடர்பில் அரச சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைக்குழுவுடன் தொடர்ந்தும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| 4 | தேசிய கல்விக் கொள்கைக்கு அமைவாக சர்வதேச பாடசாலைகளை மேற்பார்வை செய்தல் அமைச்சின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகக் காணப்பட்போதிலும், இது தொடர்பிலான ஒரு வேலைத்திட்டம் இது வரையில் முன்னெடுக்கப்படாமை மற்றும் சர்வதேச பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களை வருடத்தின் நடுப்பகுதியில் அரசாங்க பாடசாலைகளில் சேர்த்தல் தொடர்பில் புதிய சுற்றறிக்கையொன்று பிறப்பிக்கப்படாமை.<br><br>சர்வதேச பாடசாலைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் இதுவரையில் தமது அமைச்சுக்கு இருக்கவில்லை எனத் தெரிவித்த த.க.உ. அமைச்சரினால் முன்வைக்கப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரத்துக்கு ஏற்ப அந்த அதிகாரங்கள் கிடைக்கப்பெறவுள்ளதாகவும், இதற்கேற்ப சர்வதேச பாடசாலைகளின் சகல விடயங்களையும் மேற்பார்வை செய்வதற்கான ஒழுங்குமுறைப்படுத்தும் குழுவொன்று அல்லது ஆணைக்குழுவொன்றினை தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.<br><br>சர்வதேச பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகள் காரணமாக அந்த மாணவர்கள் வேறுபாட்டுக்கு ஆளாகக்கூடாதெனவும், இசைவான ஒழுங்குமுறைப்படுத்தல்கள் இடம்பெற வேண்டுமெனவும் குழுவானது வலியுறுத்தியது. | தேசிய கல்விக் கொள்கைக்கு அமைவாக சர்வதேச பாடசாலைகளை மேற்பார்வை செய்வது கல்வி அமைச்சின் நோக்கமாகும். இருப்பினும் சர்வதேச பாடசாலைகளை மேற்பார்வைக்குட்படுத்தக்கூடிய வகையில் சட்ட மறுசீரமைப்புக்களை மேற்கொள்வது அத்தியாவசிய விடயமாகும். இதற்காக 1961 இலக்கம் 08 கொண்ட உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் பயிலுனர் கல்லூரி (மேலதிக ஒதுக்கீடு) சட்டத்தின் 25 வது வாசகத்தை மறுசீரமைத்தல் (தனியார் தரப்பினருக்கும்) பாடசாலையை ஆரம்பிக்கக்கூடிய வகையில் மேற்கொள்ள வேண்டியதுடன் இது சமூக மற்றும் அரசியல் ரீதியில் உணர்வு பூர்வமான விடயமாக அமைவதினால் இதுவரையில் இவ்வாசகம் மறுசீரமைக்கப்படவில்லை.<br><br>தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சினால் அமைச்சரவை விஞ்ஞாபனம் (இலக்கம் MNPEA/2018/064 மற்றும் 2018.04.09 திகதிய) சமர்ப்பிக்கப்பட்ட அதற்குரியதாக 2019.01.22 திகதி வழங்கப்பட்டுள்ள அமைச்சரவைத் தீர்மானத்தின் (இலக்கம் 19/0132/105/003 மற்றும் 2019.01.30 ஆம் திகதி) குறிப்பிடப் பட்டிருப்பது தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர் இணைந்து சர்வதேச பாடசாலைகளின் தரச் சான்றிதழ் மற்றும் மேற்பார்வை தொடர்பான கொள்கை தேசிய கல்வி ஆணைக்குழு சபையின் ஊடாக துரிதகதியில் தயாரிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இவ் வரைவு கொள்கையினை கருத்திற் கொள்ளும் வகையில் தேசிய கொள்கை, பொருளாதார விவகார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்குமாறும் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் சர்வதேச பாடசாலைகளுடன் தொடர்புபட்ட மேற்கூறப்பட்ட கொள்கையினை தயாரித்து அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் கல்வி அமைச்சிற்கு செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடிய இயலுமை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.<br><br>அத்துடன் சர்வதேச பாடசாலைகளின் மாணவர்களை இடைநிலை வகுப்புகளுக்காக அரச பாடசாலைகளுக்கும் சேர்த்துக் கொள்ளும் போது வயது மட்டம் மற்றும் அடைவு மட்டங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுகின்றது. எனவே க.பொ.த (சா.த) மற்றும் க.பொ.த (உ.த) பரீட்சைகளுக்காக பாடசாலை விண்ணப்பதாரர்களாக தோற்றும் போது வயது எல்லையில் விசேட வரப்பிரசாதங்கள் அவர்களுக்கு கிடைக்கவில்லை. இதனால் அரச பாடசாலைகளில் இவ் வயது எல்லையில் உள்ள மாணவர்களுக்கு சர்வதேச பாடசாலைகளிலிருந்து வருகைதரும் மாணவர்கள் காரணமாக வயதெல்லையை அடிப்படையாகக் கொண்டு அநீதி ஏற்படுவதில்லை. |

<table>
<tr>
<td>5</td>
<td>பிரிவெனாக்களின் ஒழுங்குமுறைப்படுத்தலை ஓர் ஒழுங்குமுறையில் மேற்கொண்டு பிரிவெனாக் கல்வி முறைமை சீரழிவதற்கு காரணமாயுள்ள விடயங்களை ஆய்ந்தறிவதன் தற்போதைய நிலைமை.<br><br>பிரிவெனாக்களின் மேற்பார்வையானது இதுவரையில் வணக்கத்திற்குரிய தேரரொருவரினால் முன்னெடுக்கப்பட்டதாகவும், தற்போது நிருவாக சேவையில் சிவில் உத்தியோகத்தரொருவர் இதற்காக நியமிக்கப்பட்டுள்ளாரெனவும், தற்போது ஒரு சில மாவட்டங்களில் பிரிவெனாக்களின் மேற்பார்வை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு பெரும்பாலான கைதவறுகள் மற்றும் தவறுகள் திருத்தப்பட்டு வருவதாகவும் ந.க.உ. தெரிவித்தார்.</td>
<td>பிரிவெனா மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் அதிகரிக்கப்பட்டுள்ளனர். 18 உதவிக் கல்விப் பணிப்பாளர் தேரர்கள், 12 பாடப் பணிப்பாளர்கள், 30 பிரிவெனா இணைப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் 190 ஆசிரியர் ஆலோசகர்கள் ஏற்கனவே சேவையில் ஈடுபடுகின்றனர். அலுவலகச் செயற்பாடுகள் மற்றும் விடய மேற்பார்வைப் பணிகள் இடம் பெறுகின்றன. தற்போது பிரிவெனா மேற்பார்வைகள் வெற்றிகரமாக இடம்பெறுகின்றன.<br><br>தற்போது பிரிவெனா கிளையில் பணிப்பாளர் இருப்பதுடன், ஆசிரியர் மாணவர் சமநிலைப்படுத்தி பிரிவெனாக்களுக்குத் தேவையான அளவின் கீழ் ஆசிரியர்கள் வழங்கப்பட்டுள்ளனர். பாடஇணை ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டிருப்பது வெற்றிடப் பாடங்களுக்கு மாத்திரமாகும்.<br><br>ஆங்கில மொழிப் பிரிவெனாக்களுக்காக பாடவிதானங்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. ஆங்கில மொழிப் பிரிவுடன் இணைந்து பிரிவெனா பாடநூல் ஆங்கில மொழிக்கு மொழி பெயர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் வினாப்பத்திரங்கள் பரீட்சை திணைக்களத்திலிருந்து ஆங்கில மொழி மூலப் பிரிவெனாக்களுக்காக மொழி பெயர்க்கப்படுகின்றது.<br><br>பிரிவெனாக்கள் சீர்குலைவு தொடர்பில் அவ்வவ் நிறுவனங்களின் பதிவாளர் தேரர்கள் மற்றும் பிரிவெனாக்களுக்குப் பொறுப்பான தேரர்கள் தனிப்பட்ட ரீதியில் பொறுப்புக் கூற வேண்டுமென தென்படுகின்றது. கல்வி அமைச்சு மற்றும் அதன் பிரிவெனாக் கல்விக் கிளையின் பணிகளாக அமைவது கல்விச் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்காக உதவுவதாகும். அதற்குரிய சகல பணிகளும் கல்வி அமைச்சின் பிரிவெனாக் கல்விக் கிளையினால் குறைவின்றி மேற்கொள்ளப்படுகின்றது.</td>
</tr>
<tr>
<td>6</td>
<td>Sky Management நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டுள்ள கணனி வேலைத்திட்டங்கள் தொடர்பான சமர்ப்பித்தல் அந்நிறுவனத்திலிருந்து பங்கேற்ற உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இது அவர்களாகவே முன்வந்து சமூக பொறுப்பாக கருதி மேற்கொண்ட ஒரு விடயம் எனவும் குறிப்பிட்டதுடன் இதன் மூலம் அனைத்து மாணவர்களதும் தரவுகள் உள்ளடக்கிய தரவு முறையொன்று முன்னெடுக்கப்படுவதுடன் அவர்களது வங்கிக்கணக்குகளுக்கு பணம் செலுத்துவதற்கான வசதி காணப்படுவதாகவும், அதிபர்களுக்கு அதனை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான வசதி வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்படப்பட்டது.<br><br>இந்த கணனி முறைமை தொடர்பில் மாகாண சபைகளை அறிவுறுத்தி</td>
<td>தகவல் தொழில்நுட்பக் கிளையினால் Sky Management Systems என்ற நிறுவனம் இலவசமாக ஒன்லைன் வேலைத்திட்டத்தை வகுப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது.<br><br>இதற்கமைய இந்நிறுவனத்தினால் Online வேலைத்திட்டங்கள் வகுக்கப்பட்டன.<br><br>இதற்கமைய இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.<br><br>
<table>
<tr><th></th><th>மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள்</th><th>கால எல்</th></tr>
<tr><td>01</td><td>ஹோமாகம மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர வலயங்களின் மேற்பார்வை வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல். இதன் போது புலமைப்பரிசில் உதவி ஒன்லைன் வேலைத்திட்டத்தின் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.</td><td>செப்ரெம்பர் 2018 தொடக்கம் இன்று வரை</td></tr>
<tr><td>02</td><td>இவ் வேலைத்திட்டங்களை நாடுதழுவிய ரீதியில் மேற்கொள்வதற்காக வலயக் கல்வி அலுவலகங்களின் பாடஇணை உத்தியோகத்தர்கள் மற்றும் விடய எழுது வினைஞர்களை இவ் வேலைத்</td><td>2018 செப்ரெம்பர் - 2018 நவம்பர்</td></tr>
</table></td>
</tr>
</table>

அவர்களது உடன்பாட்டை பெற்றுக்கொண்டு மாகாணசபை பாடசாலைகள் உள்ளிட்ட அனைத்து பாடசாலைகளுக்கும் அமைச்சினூடாக புலமைப்பரிசில் வழங்குவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குழு பணிப்புரை விடுத்தது.

இந்த கணனி முறைமையை 2018 ஆம் ஆண்டு ஒக்டோம்பர் மாதம் 01 ஆம் திகதி முதல் தேசிய பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துமாறும்; 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் சகல பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் குழுவானது த.க.உ. இற்கு பணிப்புரை விடுத்தது.

| | | |
|---|---|---|
| | திட்டத்திற்காக பயிற்றுவித்தல் | |
| 03 | இவ் வளவாளர்களினால் தேசிய பாடசாலைகளில் விடயத்திற்குப் பொறுப்பான பிரதி அதிபர்கள் மற்றும் விடய எழுது வினைஞர்களை இவ் வேலைத்திட்டத்திற்காக பயிற்றுவித்தல். | ஜனவரி 2019<br>2019 பெப்ரவரி |
| 04 | 5 ஆம் தரப் புலமைப்பரிசில் தேசிய பாடசாலைகளுக்கான கொடுப்பனவுகள் தொடர்பில் உரிய சுற்றறிக்கையினை வெளியிடல். | 2019 பெப்ரவரி |
| 05 | 5 ஆம் தர புலமைப்பரிசில் உரித்தாகும் சகல மாணவர்களினதும் தகவல்களை தேசிய பாடசாலைகளில் உள்ளடக்குதல். | 2019 பெப்ரவரி - ஏப்ரல் |
| 06 | தரம் 05 புலமைப்பரிசில் ஒன்லைன் வேலைத்திட்டத்தில் புள்ளிவிபரங்களை உள்ளடக்குவது தொடர்பில் முன்னேற்ற மீளாய்வினை மேற்கொள்ளல். | 2019 மார்ச் ஏப்ரல் |

**திட்டமிடப்பட்டுள்ள எதிர்கால வேலைத்திட்டங்கள்**

| | திட்டமிடப்பட்டுள்ள பணிகள் | கால எல்லை |
|---|---|---|
| | இவ் ஒன்லைன் வேலைத்திட்டத்தை உத்தியோகபூர்வமாக அமுல்படுத்தல் | |
| 07 | 5 ஆம் தர புலமைப்பரிசில் ஒன்லைன் வேலைத்திட்டத்தின் கொடுப்பனவுகளை வலய மட்டத்தில் மேற்கொள்ளல். இதன் போது கல்வி அமைச்சினால் விடுவிக்கப் பட்ட ஒதுக்கீடுகள் மாகாணக் கல்வித் திணைக்களம் ஊடாக வலயக் கல்வி அலுவலகத்திற்கு வழங்கப்படுகின்றது. மாணவர் கணக்குகளுக்கு நிதி வைப்பிலிடுவதற்காக இவ் ஒன்லைன் வேலைத்திட்டத்தின் மூலம் மாதாந்தம் தன்னியக்கமாக தயாரிக்கப்படும் Slip File இனை Download செய்து வலயக் கல்வி அலுவலகத்தினால் காசோலையுடன் உரிய வங்கிக்கு அனுப்பப்படுகின்றது | 2019 ஏப்ரல் தொடக்கம் |
| 08 | முன்னேற்ற மீளாய்வு | 2019 மே தொடக்கம் |
| 09 | பிரிவெனா மற்றும் தனியார் பாடசாலை களின் ஒன்லைன் வேலைத்திட்டங்களுக் காக இணைத்தல் | 2019 ஜூன் தொடக்கம் |
| 10 | ஒன்லைன் வேலைத்திட்டத்தின் மூலம் சகல தேசிய பாடசாலைகளுக்காகவும் | 2019 ஜனவரி |

<table>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><td></td><td>கொடுப்பனவு மேற்கொண்டு முன்னேற்ற மீளாய்வு மூலம் மேற்பார்வை உட்பட பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்குதல்.</td><td>தொடக்கம்</td></tr>
<tr><td>11</td><td>மாகாணப் பாடசாலைகளுக்காக புலமைப் பரிசில் கொடுப்பனவுகள், ஒன்லைன் வேலைத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சுற்றறிக்கையினை வெளியிடல்</td><td>2020 ஜனவரி தொடக்கம்</td></tr>
</table>
</td></tr>
<tr><td>7</td><td>மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களது தகவல்கள் உள்ளிட்ட அனைத்து தரவுகளையும் உள்ளடக்கிய முறையான கணனி வேலைத்திட்டமொன்றை உருவாக்குமாறும் இதுதொடர்பான சமர்ப்பித்தலை (Power Point Presentation) மேற்கொள்ளுமாறும் வழங்கப்பட்டுள்ள கட்டளை குழுவானது கணனி முறைமையை பாராட்டியதுடன், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் வினைத்திறன் மதிப்பீட்டினையும் முறைமையின் ஊடாக மேற்கொள்வதற்கான இயலுமை தொடர்பில் ஆராய்ந்து பார்க்குமாறும் பிரேரித்தது.<br><br>இந்த கணனி தகவல் முறைமையின் அடிப்படை அம்சங்கள் இதனால் மேற்கொள்ளக்கூடிய கருமங்கள், முறைமை தொடர்பிலான மனிதவள மற்றும் பௌதீக வள முகாமைத்துவம் மேற்கொள்ளப்படும் விதம், இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க எதிர்பார்க்கும் விதம் தரவு முறைமையை இற்றைப்படுத்தல் மற்றும் அதனை தொடர்ச்சியாக முன்னெடுத்தல் ஆகிய அனைத்து விடயங்களும் மற்றும் காலகட்டங்களை உள்ளடக்கிய செயல்திட்டம் ஒன்றை 2018 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 14 ஆம் திகதியளவில் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு குழுவானது த.க.உ. இதற்கு பணிப்புரை விடுத்தது.</td><td>
<table>
<tr><th>விடயம்</th><th>நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப் படும் திகதி</th><th>முன்னேற்றம்</th></tr>
<tr><td>வலயக் கல்விக் காரியாலயத்தினால் ஆசிரியர்களின் விபரங்களை மனித வள முகாமைத்துவத் தரவு முறைமைக்குள் உள்ளடக்குதல். முறைமைக்கு அமைவாக புதிய ஆசிரிய நியமனங்களைப் பதிவு செய்தல், பதவி உயர்த்துதல், இடமாற்றம் செய்தல் போன்ற விடயங்களை இற்றைப்படுத்துதல்</td><td>2019.04.30</td><td>2019.04.30 ஆம் திகதிக்கான புதிய பதிவுகளை மேற்கொள்ளல் மற்றும் இற்றைப்படுத்தல் நிறைவடைந்துள்ளது.</td></tr>
<tr><td>பாடசாலைகளின் தொகைமதிப்பீட்டு நடவடிக்கைகள் தொடர்பாக கணினித் தகவல் முறைமையைத் தயாரித்தல்</td><td>2019.07.30</td><td>கணினி வேலைத் திட்டத்தைத் தயாரிப்பது தொடர்பாகத் தேர்ச்சி மிக்க தனியார் நிறுவனமொன்றை பெறுகைச் செயற்பாட்டு வழிமுறைகளைப் பயன்படுத்தித் தெரிவு செய்து கணினி வேலைத் திட்டம் மற்றும் மாதிரிகளைத் தயாரிக்கும் செயற்பாடுகள் தற்போது நடைபெறுவதுடன் ஜூலை மாத நடுப்பகுதியில் இக் கணினி வேலைத்திட்டத்தின் செயற்திறனைப் பரிசீலனை செய்வதற்குத்</td></tr>
</table>
</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | திட்டமிடப்பட்டுள்ளது. |
| | | அதிபர் மற்றும் கல்வித் துறையின் ஏனைய உத்தியோகத்தர்கள் தொடர்பான தரவு முறைமையைத் தயாரித்தல்( **ளுடுநுயுளுஇ ளுடுவுளுஇ ளுடுநளுஇ சிற்றூழியர்கள்)** | 2019.12.31 | இந்த முறைமைகள் தற்போது ஆக்கம் செய்யப்பட்டுத் தொடர்ச்சியாக நடைமுறையில் உள்ளன. |
| | | சகல மாகாணங்கள் மற்றும் வலயங்கள் தொடர்பான தரவு முறைமை அலகு ஒன்றை உருவாக்குதல்<br>i. இதற்கு அவசியமான உத்தியோகத்தர் சபையை நியமித்தல். **(ளுடுநுயுளுஇஜவு ளுநசஎiஉநஇஜவு யுளளளைவயவெஇனு நளநடழிஅநவெ (ழுககiஉநச)** எண்ணிக்கை விகிதாசாரத்திற்கேற்ப உத்தியோகத்தர் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்.<br>ii. அவசியமான உபகரணங்களை வழங்குதல். இணையத்தள வசதிகள், கணினி உபகரணத் தொகுதிகள் | 2018.12.31<br>2018.12.31<br>2019.12.31 | தேவையான ஆலோசனைகள் மாகாணக் கல்வித் திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.<br>இணையத்தள வசதிகள் இலங்கை அரச இணையத் தளத்தின் கீழ் **(டுபுே)** வழங்கப்பட்டுள்ளது.<br>கணினி உபகரணத் தொகுதிகள் பெற்றுக்கொள்வதற்கான நிதி ஒதுக்கீட்டை மாகாணத் திணைக்களங்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு பிரதம நிதி அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. |
| | | பாடசாலைகளுக்காக விசேட பொது இலக்கம் **(ருnஙைரந ஐனு)**ஒன்றைப் பெற்றுத்தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல். (பரீட்சைத் திணைக்களத்தின் பாடசாலை இலக்கம், அமைச்சின் பாடசாலைகள் தொகை மதிப்பீட்டு இலக்கம்) | 2019.07.30 | புள்ளிவிபரவியற் கிளையினால் பரீட்சைத்திணைக் களத்திலிருந்து பாடசாலைகள் பட்டியல் தற்போது பெற்றுக்கொள்ளப்பட்டு ஆராய்வு செய்யப்பட்டுக்கொண்டிருப்பதுடன் பாடசாலைகளுக்கா |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ன விசேட பொது இலக்கம் **(ருனெஙரந ழே)** குறித்த அமைச்சின் ஆலோசனைகள் ஜூன் மாத முடிவில் தயாரிக்கப்பட முடியும் என்பதுடன் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி ஜூலை மாதத்தின்போது இறுதித் தீர்மானங்களை மேற்கொள்ள இயலும் |
| | | பாடசாலை மாணவர்களின் கணினியுடனான நேரடித் தரவு முறைமைக்குள்(**ழுடெலைநெ**) உள்ளடக்குதல் மற்றும் இற்றைப்படுத்துதல், 2019 அம் வருடத்தில் தரம் 01 இற்கு உள்வாங்கப்பட்டுள்ள சகல மாணவர்களினது தரவுகளையும் முறைமைக்குள் பதிவுசெய்தல் | 2019.02.10 | இத் தரவு முறைமைக்குள் மாணவர்களின் தரவுகள் தற்போது பதிவு செய்யப்பட்டுவருகின்றன. |
| | | ஆசிரியர்களின் ஆளணி வள தகவல் முறைமை மற்றும் இது தொடர்பான சுற்றறிக்கையை வெளியிடுதல் | 2019.06.01 | சுற்றறிக்கை வரைபு நிறைவுபெற்றுள்ளது. எதிர்வரும் காலத்தில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. |
| | | சகல முறைமைகளும் கல்வி அமைச்சில் குறித்த ஒரு தகவல் மையத்தில் பேணி வருதல் | 2019.01.01 | கணினியுடனான நேரடித் தகவல் முறைமை **(ழுடெலைநெ)** தொடர்பான ஏற்பாடுகள் தரவு முகாமைத்துவக் கிளையினால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |